**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.725/2023**

Deposition of **PW-3/LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அசோக் | **Age** | : | 39/2026 |
| **Father's Name** | : | திரு. ஆலடியான் | **Religion** | : | இந்து |
| **Village** | : | தேனி | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Taluk** | : | தேனி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/07/2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்போது அல்லி நகரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 1.7.2023 ஆம் தேதி காலை 6 மணிக்கு போடி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது போடி குப்பிநாயக்கன்பட்டி அறிவு திருக்கோயில் அருகில் போடி நகர் காவல் நிலைய காவலர்கள் வீரமுத்து, பாலாஜி ஆகியோருடன் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்தபோது போடி தேவர் காலனி நீலிபடுகையில் குடியிருக்கும் நடராஜன் மகன் சுதாகரன் என்பவர் TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் சிடி 100 வாகனத்தில் வந்தவரை மறித்து விசாரணை செய்தபோது அவர் உட்கார்ந்து இருந்த இருக்கைக்கு முன்பாக டேங்க் பகுதியில் வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் வைத்திருந்த பொருட்களை சோதனை செய்தபோது அவர் காவலராகிய எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் எங்கள் பணியை முழுமையாக செய்ய விடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் மேற்படி எதிரியிடம் இருந்த

பிளாஸ்டிக் சாக்கை சோதனை செய்ததில் 180 ml பிடிக்கக்கூடிய எக்ஸ்பிரஸ் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் 4ம் ஓல்ட் செஸ் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் 3ம் ஒரியன் மதுபானம் நிறைந்த பாட்டில்கள் 1ம் ஆக மொத்தம் எட்டு பாட்டில்கள் வைத்திருந்தார்.

2) இதுகுறித்து அவரிடம் விசாரித்தபோது டாஸ்மாக் கடைகள் இயங்காத நேரங்களில் பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு லாப நோக்கத்தில் விற்று வந்தது ஒப்புக்கொண்டு அதேபோல் இந்த பாட்டில்களையும் விற்பனைக்காக வாங்கி கொண்டு செல்வதாக கூறினார். எனவே மேற்படி நபரை அந்த இடத்திலேயே கைது செய்து அவரிடம் இருந்த மது பாட்டில்களை அங்கு அந்நிய தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என் உடன் வந்த காவலர் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி அவர் ஓட்டி வந்த வாகனத்தையும் கைப்பற்றினேன்.

3) பின்னர் எதிரி மற்றும் வாகனம் மற்றும் மது பாட்டில்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.262/2023 பிரிவு 4(1)(a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் பிரிவு 353 இதச– ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் உடன் வந்த காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை புலன் விசாரணை முடித்து 1.7.2023 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கு சொத்துகளான வாகனத்தையும் மதுபாட்டில்களையும் படிவம் 91 மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன்.**(அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகவும், 180 ml அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை 4) அ.சா.பொ.1 ஆகவும், ஓல்ட் செஃப் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை 3) அ.சா.பொ.2 ஆகவும், ஓரியன் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை 1) அ.சா.பொ.3 ஆகவும், TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 இருசக்கர வாகனம் அ.சா.பொ.4**

**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). (படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செயய்பபடுகிறது).**

4) அன்றையதினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக பிரிவு 4(1)(a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் பிரிவு 353 இதச– ன் கீழ் குற்றம் என இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5) 1.7.2023 ஆம் தேதி மதுவிலக்கு அமலாக்க பிரிவிலிருந்து எங்களுடன் யாரும் ரோந்து பணிக்கு வரவில்லை என்றால் சரிதான். மதுவிலக்கு அமலாக்க பிரிவிலிருந்து ரோந்து பணி செய்ய எதுவும் வேண்டுகோள் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் எனக்கு வழங்கப்பட்ட அரசு இருசக்கர வாகனத்திலும் அந்த காவலர்கள் அவர்களுடைய சொந்த இருசக்கர வாகனத்திலும் சென்றோம்.

6) சம்பவ இடத்திற்கு எங்களது இரு சக்கர வாகனத்தில் லேப்டாப், பிரிண்டரோ எடுத்துச் சென்றதாக வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான் எந்த கம்ப்யூட்டர் சென்டரில் அதனை தயார் செய்தேன் என்றால் லேப்டாப்பில் தயார் செய்தேன். நான் லேப்டாப்பை சம்பவ இடத்திற்கு எடுத்துச் செல்லவில்லை என்றும் அவ்வாறு எடுத்துச் சென்று இருந்தால் நான் எனது முதல் விசாரணையிலேயே அதுகுறித்து சொல்லி இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

7) எதிரி கொண்டு வந்ததாக சொல்லும் மதுபானம் இந்த வகையான மதுபானம் என்று எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் அந்த பாட்டிலில் ஒட்டப்பட்டிருந்த லேபிளை வைத்து தெரிந்து கொண்டேன். அத்தாட்சியில்

ஓரியன் பிராந்தி பாட்டில் ஒன்று எனதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது அடித்து மூன்றாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை ஒன்றுதான். இந்தியாவில் ஓல்ட் செஃப் நிறுவனம் பிராந்தி வகையிலான மதுக்களை தயாரிப்பது இல்லை என்றால் அதுகுறித்து ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும்.

8) வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மது வகைகளை ஒரு தனிநபர் சுமார் 4.5 லிட்டர் வரை சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியிடம் இருந்தோ எதிரியின் வாகனத்தில் இருந்தோ பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

9) வாக்குமூலங்களை தட்டச்சில் தயார் செய்து கொண்டு அத்தாட்சியை கையில் தயார் செய்த விபரத்தை வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். 1.7.2023 ஆம் தேதி மதுபான கடைக்கு விடுமுறை எதுவும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் போடி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே இறுதி அறிக்கை தயார் செய்தது இல்லை என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும்.

10) முதல் தகவல் அறிக்கையும் இறுதி அறிக்கையும் நானே தாக்கல் செய்தது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. எதிரி தனது சொந்த உபயோகத்திற்காக வீட்டில் வாங்கி வைத்திருந்த மது பாட்டில்களை இந்த வழக்கில் கைப்பற்றி கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரி விற்பனை நோக்கத்தோடு மது பாட்டில்களை வைத்திருந்தால் அவரிடம் இருந்து பணம் ஏதாவது

கைப்பற்றப்பட்டு இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.02 19:12:22 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**